RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2155

# முல்லைப் பாட்டில் கருப்பொருள் வெளிப்பாடு

**தெ. கீதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி, திண்டல், ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா.

# Themes in Mullai Songs

**T. Geetha** [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women, Thindal, Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: pgeethaprabhu7@gmail.com

Received: 30-08-2022
Revised: 18-10-2022
Accepted: 28-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

Inorder to know the literary traditions and principles of the ancient Tamil people Mutharporul, Uriporul and Karuporul must be placed. Naboothanar has explained well the theme of Mullai songs which is one among the Patuppattu text. Mullai song contains both internal and external meanings. Although it is believed that Pandiyan Nedunchezhiyan is the protagonist of the text but it is not officially mentioned in the text. Although Mullai songs are about both internal discipline and external discipline, it first gave importance to the internal discipline. Mullai songs contains Mutharporul, Uriporul and karuporul and this article particularly deals with Karuporul (themes).

**Keywords:** Mullai Songs, Mutharporul, Uriporul, Karuporul, Tradition

## முன்னுரை

காலத்தால் முற்பட்ட நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பினை எடுத்தியம்பும் கருவூலமாகச சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. வற்றாத ஊற்றாகத் திகழும் சங்க இலக்கியங்கள் புறக் காட்சிகளையும் அகக் கருத்துக்களையும் அழகுற வெளிப்படுத்துகின்றது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகைஎனத் தொகுக்கப்பட்ட இவ்விலக்கியங்கள் சங்ககாலத் தமிழ் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைப் பிரிவுகளாக வாழ்க்கை நடத்திய பான்மையை விளக்குகின்றது. இந்த ஐவகை நிலங்களுக்கும் அடிப்படையாக அமையும் பொருள்களில் முதற்பொருள், உரிப்பொருள், பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான முல்லைப்பாட்டில் உள்ள கருப்பொருள்களை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கருப்பொருள்

கருப்பொருள் என்பது மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும். முதற்பொருள், உரிப்பொருள் மற்ற இரண்டு வகையாகும். ஐந்துதிணைகளுக்கும் உரிய நிலங்களில் வாழும் உயிரினங்களும் வழங்கும் பொருள்களும் கருப்பொருள் என வழங்கப்படுகின்றது. கருப்பொருள் அகத்திணைக்கு கருவாய் அமைவன. உரிப்பொருள் சிறந்து விளங்க கருப்பொருள் அமைகிறது. மனிதனின் வினை நிகழ்ச்சிக்குத் துணையாக இருப்பவைகளும் நிலம்பொழுது இவற்றின் இயல்பால் தோன்றுபவைகளும் படைக்கப்படும். மானுட நிகழ்ச்சியை விளக்குவதற்குரிய வாயிலாக அமைபவைகளும் கருப்பொருளாகக் குறிக்கப்படுகின்றன.

நிலங்களுக்குத் தெய்வத்தை வரையறுத்த தொல்காப்பியர் கருப்பொருளில் பொதுவாகவே சுட்டிச் செல்கிறார் நிலங்களின் இயல்பான பண்புகளிலிருந்து அந்நிலத்து மக்களின் சமூக வாழ்க்கைமுறை அமைகிறது. நிலத்தின் பண்புகள், அங்குவளரும் தாவரங்கள், வாழும் உயிரினங்கள் ஆகியவற்றின் நடத்தையிலிருந்து மனிதரின் நடத்தையும் தகவுகளும் அமைகின்றன. கருப்பொருள் என்பது அந்தந்தத் திணைக்குஉரியனவும், அவற்றின்கண் உள்ளனவும் ஆகியபொருள்கள். ஒவ்வொரு நிலத்தையும் சார்ந்து அங்கு விளங்கும், வாழும், திகழும் பொருள்கள் யாவும் கருப்பொருள்களே அவற்றைத் தொல்காப்பியர்.

ஐந்துதிணைகளுக்கும் உரியநிலங்களில் வாழும் உயிரினங்களும் வழங்கும் பொருள்களும் கருப்பொருள் என வழங்கப்படுகின்றது. அந்தந்த நிலங்களுக்கு ஏற்ப வேறு வேறாக விளங்கும் அக்கருப்பொருள்களை இலக்கண நூல்கள் பலவாறுவகைப்படுத்தும், இதனைத் தொல்காப்பியர்,

"தெய்வம் உணாவேமாமரம் புள்பறை

செய்தியாழின் பகுதியொடுதொகைஇ

அவ்வகைபிறவும் கருஎனமொழிப". (Subramaniyan, 2003)

எனத் தொல்காப்பியர் எட்டாக வகைப்படுத்தித் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை செய்தி, யாழின் பகுதி என்று எட்டு வகைகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளதுடன் அவ்வகைப் பிறவும் என்றதனால் பிற்காலத்தில் கருப்பொருள் பதினான்காக வகுக்கப்பட்டது.

## அகப்பொருள் விளக்கம்

ஆரணங்குஉயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு

ஊர் நீர் பூ மரம் உணாபறையாழ் பண்

தொழில் எனக் கருவிஈர் எழுவகைத்து ஆகும் (Puliyur Kesigan, 1964)

மேற்கூறிய பாடலில் நாற்கவிராசநம்பி அவர்கள் கருப்பொருளினை 14ஆக வகைப்படுத்துகிறார்.

## முல்லைநிலக் கருப்பொருள்கள்

1. தெய்வம் - திருமால்
2. விலங்கு - மான், முயல்
3. பறவை - காட்டுக்கோழி
4. தலைவர் - கிழத்திகுறும்பொறைதோன்றல்
5. மக்கள் - ஆய்ச்சியர் ஆயர்
6. உணவு - வரகு, சாமை, முதிரை
7. பூ - முல்லை, பிடவம்
8. நீர் - சுனை
9. ஊர் - பாடி
10. மரம் - கொன்றை, காயா
11. தொழில் - கால்நடைவளர்ப்பு
12. பறை - ஏறுகோட்பறை
13. யாழ் - முல்லையாழ்
14. பண் - சாதாரி

## முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டு பத்துப்பாட்டிலேயே மிகவும் சிறியதாகும். 103 அடிகளால் ஆனது. காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியதாகும். ஆசிரியப்பாவால் இயற்றப்பட்ட

இந்நூல் முல்லைத் திணைக்குரிய இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. போர்மேற் சென்ற தலைவன் திரும்பிவரும் அளவும் அவன் கூறிய சொல் மாறாது ஆற்றியிருந்த செயலைக் கூறுகிறது. இத்தகைய முல்லைப்பாட்டில் கருப்பொருள் வெளிப்பாடு பின்வருமாறு,

## திருமால்

தமிழர்கள் முல்லைநில தெய்வமாக மாயோனை வணங்கி செய்தியை சங்க இலக்கியத்தின் வாயிலாக அறியமுடிகின்றது. மாயோன் என்றால் கருமை நிறம் கொண்டவன் என்று பொருள்படும். திருமால் மச்ச அவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், பரசுராம அவதாரம், ராம அவதாரம், பலராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என தசாவதாரங்கள் எடுத்து உலக உயிர்களைத் துன்பத்திலிருந்து நீக்கி நீதியை நிலைநாட்டினார் என நூல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த திருமால் சங்க இலக்கிய பத்துப்பாட்டில் ஒன்றான முல்லைப்பாட்டின் கருப்பொருள் ஆகிறார். அவர் குறித்த செய்திகள் முல்லைப்பாட்டில் இடம்பெறுகிறது.

“நனந்தலையுலகம் வளைஇ நேமியொடு

வலம்புரிபொறிந்தமாதாங்குதடக்கை

நீர்செலநிமிர்ந்தமாசல் போல” (Narayanavelupillai, 1994).

அகன்ற இடத்தையுடைய உலகத்தை வளைத்துச் சக்கரமும் சங்குமாகிய குறிகளையுடையனவும் திருமகளை அணைத்தனவுமாகிய வலியகையினை உடையவனும் ‘மாவலி வார்த்தநீர் கையில் சென்ற அளவில் விண்ணிடத்து உயர்ந்த திருமால் போல’ என திருமால் குறிப்பிடப்படுகிறார். இவ்வரிகளில் முல்லை நிலத்தெய்வமாகிய திருமால் கருப்பொருளாக வெளிப்படுகிறது.

## முல்லைப்பூ

“யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு

நாழிகொண்ட நறுவீமுல்லை

அரும்பவிழ் அலரிதூஉய்க்கை தொழுது” (Narayanavelupillai, 1994).

முது பெண்டிர் அரும்புகள் மலர்ந்த முல்லைப் பூக்களை நாழியில் கொண்ட நெல்லோடு தூவி, தெய்வத்தை வணங்கிய செய்தி இடம் பெறுகிறது. இவ்வரிகளில் முல்லை நிலமலராகிய முல்லைப் பூ கருப்பொருளாக வெளிப்படுகிறது.

## தலைவியைத் தேற்றுமிடத்து கருப்பொருள் வெளிப்பாடு

தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்தது. ஆனாலும் தலைவன் இன்னும் வராத காரணத்தால் தலைவி பிரிவுத் துயரால் வருந்துகின்றாள். பெருமுது பெண்டிர் அவளை ஆட்டுவிக்க ஆயர் தெரு சென்று நற்சொல் கேட்டு திரும்பி வருகின்றனர்.

“சிறுதாம்புதொடுத்தபசலைக் கன்றின்

உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்

நடுங்குசுவல் அசைத்தகையள், கைய

கொடுங்கோற் கோவலர் பின்நின்றுஉய்த்தர (Narayanavelupillai, 1994).

சிறுகயிற்றால் கட்டப்பட்ட பச்சிளங்கன்றுகள், பாலுண்ணாமையால் ஏற்பட்டபசியால் வருத்திச் சுழலுவதைப் பார்த்த இடையர் பெண் ஒருத்தி, குளிரால் நடுங்கும் தன் தோள்களைக் கையணைத்துத் தடுத்தவளாய் அக்கன்றுகளை நோக்கி 'கோவலர் பின் நின்று செலுத்த, மேய்ச்சலை முடித்துக் கொண்டு இப்பொழுதே வந்துவிடுவர் நின் தாயார்' என அமையும் வரிகளில் முல்லைநில மக்களாகிய ஆயர்கள் மற்றும் முல்லை நில தொழிலாகிய ஆநிரை மேய்த்தல் முதலிய கருப்பொருள்கள் வெளிப்படுகின்றது.

## பிடவம்

பிடவ மலர்கள் கார்கால முதல் மழையின் போது ஒரே நாளில் பூத்துக் குலுங்கும். மறுநாளே பூக்கள் உதிர்ந்து விடும் இவ்வாறு ஒரு வார காலம் பூக்கக் கூடியது. இதனைக்'குட்டி பிலாத்தி' என்றும் அழைப்பர்.

இலை இல பிடவம் ஈர் மலர் அரும்ப (Narayanavelupillai, 1994).

இலைகள் இல்லாத பிடவ மரங்களில் மலர்கள் அரும்பி நிற்கும் செய்தியை இவ்வரிகள் குறிக்கின்றது. அதுபோலவே முல்லைப்பாட்டில் முல்லை நிலக் கருப்பொருளாக பிடவ மலர் இடம்பெறுகின்றது

"சேண் நாறுபிடவமொடு பைம்புதல் எருக்கி" (Narayanavelupillai, 1994).

மலர்ந்து மணம் வீசும் பிடவமலர் என முல்லைப்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது.

## கொன்றை மரம்

நம் தமிழ் இலக்கியங்களில் சிவபெருமான் கொன்றைப் பூவை தலையில் சூடியவராக வர்ணிக்கப்படுகிறார். இம்மலர் அலங்காரத்திற்கும் மருத்துவத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொன்னென மலர்ந்த கொன்றை (Duraisamipillai, 1947)

பொன்னிறத்தில் கொன்றைமலர் மலர்ந்துள்ளது என குறிப்பிடுகின்றது. இக்கொன்றைமலர் முல்லைப்பாட்டில் கருப்பொருளாக வெளிப்படுகின்றது.

## காயா மரம்

முல்லை நிலக் கடவுளான திருமாலை 'காயாம்பூ மேனியன்' என்பர். காய்ப்பது இல்லையாதலால் காயா எனப் பெயர் பெற்றது.

"கரு நனை காய காண மயில் அவிழவும்" (Narayanavelupillai, 1994).

காயாம் பூ மலர்ந்து இருக்கும் பொழுது மயிர் கழுத்து போன்ற பளபளப்பான நீல நிறமாக இருக்கும். இதனை தற்காலத்தில் காசாம்பூ என்று அழைப்பர் இதன் கருநீல நிறம் கண்ணுக்கு இடும் அஞ்சனம் போன்று இருக்கும். இதற்கு அஞ்சனி, காசை, வச்சி போன்ற பெயர்களை நிகண்டுகள் குறிப்பிடுகின்றது பொதுவாக காடுகள் அழிந்தாலும் காயா அழியாது என்று கூறப்படுகின்றது. இதனையே முல்லைப்பாட்டில்,

"செறிஇலைக் காயா அஞ்சனம் மலர"

காய மரத்தில் மலர்கள் மலர்ந்துள்ள செய்தியை அறிய முடிகின்றது (Narayanavelupillai, 1994).

## வரகு

வரகு சிறுதானிய வகைகளில் ஒன்றாகும். இது பண்டைய தமிழகத்தில் அதிகம் உட்கொள்ளப்பட்ட ஓர் உணவு தானியமாகும். தற்பொழுது இதன் பயன்பாடு குறைந்து விட்டது. கபிலர்

தன் பாடலில் ஈன்றணிய மயிர் பேடையை போன்று வரகு கதிர் விளைந்துள்ள தன்மையினைக் குறிப்பிடுவர் அதுபோல் முல்லைப்பாட்டில்,

"கானம் நந்தியசெந்நிலப் பெருவழி

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்" (Narayanavelupillai, 1994)

செவ்விய முல்லை நிலப் பெரு வழியில் உயர்ந்து வளர்ந்துள்ள செடியில் வரகு கதிர் நிறைந்துள்ள செய்தியை இவ்வரிகள் புலப்படுத்துகின்றது. முல்லைநில உணவுப் பொருளான வரகு என்னும் கருப்பொருள் வெளிப்படுகின்றது.

## மான்

மான் என்னும் விலங்கிற்கு கலை, இரலை, புல்வாய், உழை, நவ்வி, கவரி, மரை, கடமான், ஆமான் எனப் பல பெயர்கள் இருந்ததை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

"இரும்பு திரித்து அன்ன மா இரு மருப்பின்" (Puliyur Kesigan, 1964)

மானின் தலையில் உள்ள கொம்புகள், முறுக்கிய இரும்புக் கம்பியைப் போல் இருப்பதாக இந்த அகப் பாடல் விளக்குகின்றது. இது போன்றே மானின் கொம்புகள் குறித்து முல்லை பாட்டில்,

"திரிமருப்பு இரலையொடுமடமான் உகள

எதிர்செல் வெண்மழைபொழியும் திங்களில்" (Narayanavelupillai, 1994)

முறுக்கிய கொம்புள்ள ஆண் மான் தன்னுடைய பெண் மானுடன் விளையாடிய செய்தி பெறப்படுகின்றது. இவ்வரிகளில் முல்லை நில விலங்கான மான் கருப்பொருளாக வெளிப்படுகின்றது.

## முடிவுரை

முல்லைப்பாட்டில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருள்களையும் நப்பூதனார் சிறப்பாக விளக்கியுள்ளார். இவற்றில் நிலத்தினும் காலத்தினும் தோன்றும் கருப்பொருள் முல்லைப்பாட்டில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதனை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. கருப்பொருள்களை வெளிப்படுத்துவதன் மூலம் சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, அவர்களோடு புழக்கத்தில் இருந்த பொருட்கள், வாழ்ந்த விலங்குகள், இயற்கை சார்ந்த மரம் செடி கொடிகள் என ஒட்டு மொத்த வாழ்வியல் கூறுகளும் இக்கட்டுரையின் மூலம் விளக்கப்படுகிறது.

## References

Duraisamipillai, S. (1947) Ainkurunuru, Annamalai University, Chidambaram, India

Narayanavelupillai, (1994) Pathupattu, Mullai Nilayam, Chennai, India

Puliyur Kesigan, (1964) Agananooru, Paari Nilayam, Chennai, India

Subramaniyan, S.V. (2003) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.
**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License